Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.92/2020 |
| Police station | : | RPF – Cuddalore |
| Deposition of witness for Prosecution | : | LW5 / PW4 |
| Name | : | சரவணன் |
| Father Name/Husband Name | : | கிருஷ்ணப்பன் |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 25.07.2024 நாளாகிய இன்று திருமதி.L.வனஜா, B.A., B.L., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

( எதிரி ஆஜர்).

**<u>முதல் விசாரணை</u>:**

நான் தற்போது குள்ளஞ்சாவடியில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் சோதனை பிடியாணையில் உள்ள சாட்சி கையெழுத்தில் முதலாவதாக உள்ள கையெழுத்து மற்றும் என்னிடம் காட்டப்படும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். நான் எதிரி பாபு என்பவர் கடைக்கு பக்கத்தில் மளிகை கடை வைத்து நடத்தி வருகிறேன். சுமார் 3 வருடத்திற்கு முன்பு மாதம், தேதி , ஞாபகம் இல்லை. ரயில்வே போலிசார் பாபு என்பவரின் கடைக்கு வந்து இரும்பு பொருட்களை எடுத்ததாக என்னிடம் கூறி கையெழுத்து வாங்கினார்கள். அந்த பொருட்களை நான் கண்ணால் பார்க்கவில்லை, மற்ற படி இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது கையெழுத்து போடச்சொன்னார்கள் கையெழுத்து போட்டேன். ரயில்வே போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் என்னுடைய வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

**<u>சாட்சியை அரசுதரப்பில்   பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதின்பேரில் அனுமதியளித்து அ.த.கு.வி.</u>**

கடந்த 31.12.2019 ம் தேதி சுமார் 13.20 மணியளவில் நானும் எனது நண்பர் பாலமுருகன் என்பவரும் என் மளிகை கடையில் நின்று பேசிக்கொண்டிருந்தபோது கடலூர் ரயில்வே பாதுகாப்பு கடை கடலூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் பாபு என்பவரின் கடைக்கு வந்து இரும்பு பொருட்களை எடுத்தது சம்பந்தமாக விசாரணை செய்து எங்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு சோதனை பிடியாணை மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்தார் என்றாலும், சோதனை பிடியாணை மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்திலும் நானும், பாலமுருகன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றாலும், மேற்படி விவரத்தை போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க அவரை வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டி அரசு தரப்பு சாட்சியத்தில் இருந்து விலகி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

-

Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.92/2020 |
| Police station | : | RPF – Cuddalore |
| Deposition of witness for Prosecution | : | LW6 / PW5 |
| Name | : | பாலமுருகன் |
| Father Name/Husband Name | : | சீனுவாசன் |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 25.07.2024 நாளாகிய இன்று திருமதி.L.வனஜா, B.A., B.L., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

( எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை:**

நான் தற்போது குள்ளஞ்சாவடியில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் சோதனை பிடியாணையில் உள்ள சாட்சி கையெழுத்தில் இரண்டாவது உள்ள கையெழுத்து மற்றும் என்னிடம் காட்டப்படும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். நான் எதிரி பாபு என்பவர் கடைக்கு 3 கடை தள்ளி சைக்கிள் கடை வைத்து நடத்தி வருகிறேன். நான் சரவணன் என்பவரின் மளிகைக்கடையில் பொருட்கள் வாங்க வந்தபோது, ரயில்வே போலிசார் பாபு என்பவரின் கடைக்கு வந்து இரும்பு பொருட்களை எடுத்ததாக என்னிடம் கூறி கையெழுத்து வாங்கினார்கள். எனக்கு எதுவும தெரியாது என்று சொன்னேன். ஒன்றும் பிரச்சனை இல்லை போடுங்கள் என்று சொன்னார்கள் அதனால் கையெழுத்து போட்டேன். அந்த பொருட்களை நான் கண்ணால் பார்க்கவில்லை, மற்ற படி இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது கையெழுத்து போடச்சொன்னார்கள் கையெழுத்து போட்டேன். ரயில்வே போலிசார் என்னை

விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் என்னுடைய வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

<u>சாட்சியை அரசுதரப்பில் பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதின்பேரில் அனுமதியளித்து அ.த.கு.வி.</u>

கடந்த 31.12.2019 ம் தேதி சுமார் 13.20 மணியளவில் நானும் எனது நண்பர் சரவணன் என்பவரும் அவருடைய மளிகை கடையில் நின்று பேசிக்கொண்டிருந்தபோது கடலூர் ரயில்வே பாதுகாப்பு கடை கடலூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் பாபு என்பவரின் கடைக்கு வந்து இரும்பு பொருட்களை எடுத்தது சம்பந்தமாக விசாரணை செய்து எங்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு சோதனை பிடியாணை மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்தார் என்றாலும், சோதனை பிடியாணை மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்திலும் நானும், சரவணன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றாலும், மேற்படி விவரத்தை போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க அவரை வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டி அரசு தரப்பு சாட்சியத்தில் இருந்து விலகி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.